# நாடோடி மனம்




**ம**னித மனம் நிலையிலா தொன்று என்பது வெள்ளிடை மலை. **நாடோடி மனம்** என்னும் இந்நூல் முற்றிலுமான தொரு கட்டுரைத் தொகுப்பு. மனம் நாடும் தேடும் சிந்தையோட்டத்தின் வெளிப்ப்பாடாகவே இந்நூல் அமைகிறது. கண்ட கேட்ட, படித்த அத்துனை செய்திகளும் அரங்கம் ஏறுகின்றன. தனது கருத்துக்களை காட்டுகளுடன் பதிவு செய்கிறார். வேண்டுதல் என காயத்ரி மந்திரத்துடன் தொடங்குகிறது, நூல். அதன் செவ்விய விளக்கமும் பகிரப் படுகிறது. முத்தாய்ப்பாக, பெரியபுராணப் பா ஒன்றை முன் வைக்கிறார், சொல்லும் வகையது, சிறப்பானதாக இல்லாவிடிலும், சொல்லப் படுவது, சிறந்ததாயின், அதனை மேற்கொள்வர் எனத் தொடங்குகிறார் நூலாசிரியர். முன்னுரையில், உண்மையில் அது முன் உரையாகவே எழுதப்பட்டது என்கிறார். ஈசாவஸ்யம் இதம் ஸர்வம் எனும் முதற் கட்டுரையில், தோன்றி மறையும் இவ்வுலகில், அனைத்துமாய் நிறையும் பரம் பொருள் என்பதை, ஒவ்வொருவர் வாயிலாகவும் பகிர்கின்றார்.

கற்பெனப் படுவது எனும் ஒரு கட்டுரை, தொல்காப்பியச் சூத்திரத்தோடு, தொடங்குகிறது. பண்டு வழக்கை நிலைநாட்டவே, என்மனார்ப் புலவர், என்ப என்றெல்லாம் தொல்காப்பியர் சுட்டுகிறார் என்பதையும் விளக்குகிறார். நச்சினார்கினியர் உரை மட்டுமல்ல, திருக்குறள் விளக்கம் எனும் நூலில், காணப்படும், நளன்—தமயந்தி, கற்பு நெறியையும் சுட்டுகிறார் பாடலுடன். பாரதியை தனது ஞான ஆசான் என்பதை அங்கங்கே, சுட்டுவதோடு, சிறப்பித்து வெளிப்படுத்துகிறார். வடமொழி எனப்படும் சமஸ்கிருத்திலும் இவருக்கு ஆழ்ந்த புலமையும், அதனை ஸம்ஸ்கிருதம் எனவாய் உச்சரிக்கப்பட வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்துகிறார். ஆதிசங்கரரின் ஸ்லோகங்களையும் ஆங்காங்கு, சுட்டி விளக்குகிறார். எதனில் எது சிறப்பாக உள்ளதோ அதனைப் போற்ற வேண்டும் எனும் நெறியோடு, இவரது அனைத்துப் படைப்புகளும் அமைந்துள்ளன. ஓரிடத்தேனும், இது, அங்கிருந்து இங்கு வந்தது, இங்கிருந்து அங்கு போனது என்றெல்லாம், மொழிப் போர் கருத்துக்களை இவர் கையாளவே இல்லை. ஸகஜமாக எனும் சொல் தமிழில் ஏன் அவ்வாறு, சகஜம் என எழுதப்படுகிறது என்பதையும் விளக்குகிறார். இயல்பு வழக்கம் எனும் அதன், பயன்பாட்டையும் விளக்குகிறார். தெலுங்கில் உள்ள அயினன்தவரக்கு தமிழில் காணப் படும் இயன்றவரைக்கும் என்பது தான் என்கிறார். கேள்விக்குறியாகிறது எனும் சொல்லாட்சியின் தவறை சுட்டுவதுடன் அதன் விளக்கத்தையும் காட்டுகளுடன் தருகிறார். தாம் திருக்குறள் ஆழ்ந்து படிக்க கிடைத்த வாய்ப்பை, தன் எளிதான, இயன் நிலையிலேயே விவரிக்கிறார். அரசியல் களத்தைச் சிறிதே தீண்டுகிறார், ஆயினும், கருத்தைப் பதிப்பிக்கிறார். தீண்டாமை, மாறவில்லை, என்பதோடு,ஆரியத் திராவிட சிந்தனைகள் யாவற்றையும் சுட்டுகிறார்.

மகாபாரதம் மீதான அலசலில், அந்நூலின் தேவையையும் தேடலையும் நன்கு விவரிக்கிறார். அதன் கதை மீதான விமரிசனங்களுக்கும் விளக்கம் தருகிறார். பிறிதொரு கட்டுரையில், திருவிளையாடல் படத்தில் வரும் கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி, எனும் பாடல் காட்டும் கூந்தல் மணம் பற்றிக் கூறுமிடத்து, கூந்தலுக்கு மணம்

உண்டு என்பதை, இன்னும் சில சங்க காலப் பாடல்களுடன் விவரிக்கிறார். மொழி, வரிவடிவம் மீதான தனது கருத்துக்களைப் பதிப்பிக்கிறார்.

திருக்குறள் உரையாசிரியர்கள், மதம், நாத்திகம் என தன்வயப் படுத்த முயலலையும் விவரிக்கிறார். வடமொழியும் தமிழும் போற்றிய வாழ்வியல் நெறிகளைச் திருமணச் சடங்குகளில் எங்ஙனம் நிகழ்த்தப் பெருகின்றன என்பதையும் விவரிக்கின்றார். அங்கு அவர் பாரதியையும் சுட்டத் தவறவில்லை.

பெரிய புராணப் பெருமையை அதன் ஆய்வு நூல்கள் வாயிலாகவும், அது காட்டும், ஊர் சிறப்பு முதலானவற்றிலும் தன் பார்வையைப் பதிக்கிறார். **Anaphora** என்பது பின்வருநிலையணி என்பதை, அதனை நண்பர்களுடன் பகிர்ந்து உரையாடியதை, அழகுடன், சொற்பொருள் பின்வரு நிலையணி, என்பதன் மூன்று நிலைகளையும் விவரிக்கிறார். அம்புலிமாமாவின், விக்கிர மாதித்தன் கதையில் தொடங்கி, வியாசர் பாரத்தையும் தொட்டு, குறள் விளக்கம் படித்ததையும் நினைவு கூர்ந்து, பாடல்கள் சிலவற்றின் விளக்கங்களோடு, கட்டுரையை முடிக்கிறார்.

அவரது ஆங்கிலப் புலமையை, ஆங்கிலத்தோடு ஒரு விளையாட்டு எனும் கட்டுரையில் காணமுடியும். **ROAD, BROAD, ABROAD** என்பதாக, எண்ணிறந்த சொற்களுடன். **TAKE OVER, OVERTAKE** என்பனவற்றுடன் **SET UP, UPSET** முதலானவும் சேரும் என்கிறார். **மாத்ரு தேவோ பவ** என்பது, கடைசியான 23ம் கட்டுரை. தாயே தலையான தெய்வம் என்பதை, ஔவை, சாணக்கியரின் சொற்களால் விவரிப்பதுடன், தேவி மகாத்மியம், பாரதியாரின் கருத்து, சாக்ரடீஸ் மகனுடன் நிகழ்த்தியது, எனவாய்த் தொடர்ந்து, ஆதி சங்கரருடைய ஸ்லோகங்களில், நிறைவுடன் தனது கருத்தைப் பதிப்பிக்கிறார். கண்ணே மணியே முத்தே என என்னை வளர்த்தவளே, இப்பிண்டமாகிய அரிசியை உனக்கு அளிக்கிறேன் என்பதாக அவர் விவரிக்கும் போது, இதே நிலைப்பாட்டைப் பட்டினத்தார், ஐயிரண்டு திங்களாய் எனப் பாடியதும், இதே மனம் கொண்டு நிகழ்த்தியதும் நினைவுக்கு வந்தது. தாயினும் சாலப் பரிந்து, தாயுமானவன் என்பன வற்றை, பலரும் படித்திராத பலநூல்களை மேற்கோள் செய்தவருக்கு எங்ஙனம் பட்டினத்தார், நினைவு வராமற்போனார் எனத் தெரியவில்லை. ஈண்டு, அவரது **உள்ளது உண்மை** எனும் கட்டுரைதான் நினைவுக்கு வருகிறது. தனது கருத்தைத் தெளிவாக விளக்கமிடுகிறார். நிறைய ஆர்வத்தால் படித்தேன் என்கிறார். பிறிதோரிடத்தில், யான் அறிந்தனவற்றையேத் தாங்கள் கேட்பதால் விளக்க வருகிறேன் என்கிறார். இயல்பாகவும் செம்மையாகவும், தன்னிலையை சேக்கிழாரின் வரிகளுடன் நூலின் தொடக்கதிலேயே தந்துள்ளார். காக்கைப் பாடினியார் முதலான சங்கப் புலவர், சங்க இலக்கியம், நூலாய்வு செய்தோர், சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகம்,இப்படி பல மேற்கோள்கள் ஒவ்வொரு கட்டுடையிலும். அவற்றின் வரிகளையும் பக்க எண்களையும் தருகிறார். ஆய்வுக் களமாக நிறையும் ஓர் அரிய நூல். மனிதனின் மன ஓட்டத்துக்கு இன்நூல் ஒரு சான்று மட்டுமன்று. ஈராயிரமாண்டு, தமிழ் நூல்களுடன், பல வடமொழி நூல்களையும் வாசித்த ஒரு நிறைவு ஏற்படுகிறது. இதனை ஒரு பொது நோக்கு ஆய்வு நூலாக சொல்லலாம். அவரது பன்மொழிப் புலமை. செவ்விய சிந்தனை. நடுவுநிலையான அலசல். யாவும் நிரம்பிய ஒரு இலக்கிய பொக்கிஷம் என்பதில் ஐயமில்லை. அனைவரும் வாங்கிப் படித்து இன்புறுங்கள்! =0=